முகம்
(மாத இதழ்)

திருவள்ளுவர் ஆண்டு 2055
பங்குனி - 19 (01.04.2024)

நிறுவனர்
**மாமணி**

ஆசிரியர்:
**முனைவர் இளமாறன்**
94442 64111
044 - 4557 9006

தனி இதழ் ரூ.15/-
ஆண்டுக் கட்டணம் ரூ.150/-
10 ஆண்டுக்கு ரூ.1000/-

விளம்பரக் கட்டணம்
முழுப்பக்கம்

உள்ளே ரூ.1000/-
வெளியே ரூ.2000/-

**முகம்** என்னும் பெயரில்
காசோலை அனுப்பலாம்

**முகம் தொடர்பு முகவரி:**
எண்.26, பாரதிதாசன் தெரு, திருநகர்,
சாபர்கான்பேட்டை, சென்னை- 600 083.



மெய்ப்பொருள் காண்பது அறிவு
-குறள்

மின்னஞ்சல்: mugam.idhazh@gmail.com
இணையதளம்: http://www.mugamidhazh.net.in

# வாழ்த்துங்கள்!

**மு**கம் இதழ் இம்மாதம் 42ஆம் ஆண்டில் கால் பதிக்கிறது. இன்றைய சூழலில் ஓர் இதழ், தொடர்ந்து வெளிவருவது பெரும் சாதனை! அதுவும் தொடர் அறு படாமல், ஓர் இதழ்கூட விடுபடாமல் வெளியாகும் விரல்விட்டு எண்ணக் கூடிய இதழ்களில் 'முகம்' இதழ் தனித்துவமானது. (நூலக ஆணைக் குழுவினரின் அறியாமைக்கு நாங்கள் பொறுப்பல்ல.) வணிக நோக்கின்றி, கொள்கை நோக்கில் வெளியாகும் 'முகம்' இதழுக்குத் திங்கள்தோறும் புதிய உறுப்பினர் கள் சேருவது இதழுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதுகிறோம். இதழ் அஞ்சலில் வரவில்லை என்றால் உடனே தொலைபேசியில் கேட்கி றார்கள் என்பதிலிருந்தே இதழ் சரியான திக்கில் பயணிப்பதை உணர்கிறோம்.

முகம் இதழில் விளம்பரங் கள் மிகக் குறைவு என்றாலும், இதழின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு இதழுக்கான நன்கொடை போல் அளிக்கும் ஓரிரு விளம்பர தாரர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறோம். இதழின் கருத்தியலை ஏற்று உறுப்பினர்கள் நன்கொடை வழங்குகின்றனர். அதுதான் இதழின் நிலைப்பிற்குக் காரணம். அவர்களுக்கு நன்றி உரித்தாகட்டும்.

குறிப்பாக, 90 அகவையைக் கடந்த திருவொற்றியூர் புரவலர்

வெ.பொன்னுரங்கம் அவர்கள், தம் தாய், தந்தை, வாழ்வில் முன்னேற்றிய மாமன் ஆகியோ ரின் பிறந்தநாள், மறைந்த நாள்களில் தொடர்ந்து நன்கொடை வழங்கி அவர்களைப் போற்று வதுடன், தமக்கு உதவி செய்த நண்பர்களுக்கும் இவரே வாழ்நாள் உறுப்பினர் தொகை செலுத்தி இதழை வளர்த்து வருகின்றார். சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளுக்கும், நினைவு நாளுக்கும்கூட இவர் இதழுக்கு நன்கொடை வழங்கி வருகின்றார். இது யாரும் செய்யாத செயல். இவருடைய ஈர நெஞ்சிற்கும், பொதுநலச் சிந்தனைக்கும் தலை வணங்குகிறோம்.

இவ்வாண்டு சனவரி மாத பொங்கல் இதழில், 42ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து உறுப்பினர் கட்டணம் புதுப்பிக்காத வர்களுக்கும், இதழைப் பற்றிய எவ்விதப் பின்னூட்டமும் இல்லாதவர்களுக்கும், நெடுங்கால மாக இலவயமாக இதழ் பெறுபவர் களுக்கும் முகம் இதழ் நிறுத்தப் படும் என்று அறிவித்திருந்தோம். இதைப் பொருட்படுத்தாதவர்களுக்கு இத்திங்கள் முதல் இதழ் நிறுத்தப் படுகிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஓர் இதழ் அச்சாகி வெளிவருவதற்கு எத்தகைய உழைப்பும் பணச் செலவும் ஏற்படுகிறது என்பதைப் பற்றிச் சிந்திக்காதவர்களுக்கு இதழ் அனுப்பிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

உறுப்பினர்கள் பலர் தாங்கள் பங்கேற்கும் விழாக்கள், குடும்ப விழாக்கள், நூல் வெளியீட்டு விழாக்கள், விருது பெற்ற விழாக்கள் படங்களை அனுப்பி இதழில் வெளியிட கேட்டுக் கொள்கிறார்கள். தங்களுக்கு விளம்பரம் தேவை என்று நினைப் பவர்கள், விளம்பரக் கட்டணமாக சிறு தொகைகூட அனுப்புவதில்லை. அதிலும் குறிப்பாக, அரசின் விருதுகளைப் பெறுவோர் தமக்குக் கிடைத்த தொகையிலிருந்து சிறு தொகையாவது இதழுக்குத் தரலாம் என்று நினைப்பதில்லை. இனி தொகை அனுப்புவோருக்கு மட்டுமே படங்கள் இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதழ் களை இலவயமாக அச்சடித்துக் கொடுக்கும் காலம் இன்னும் வரவில்லை. பொதுநலச் சிந்தனை யாளர்கள் இக்கருத்தைத் தவறாகக் கொள்ளமாட்டார்கள் என்று நம்பு கிறோம்.

சிற்றிதழ்கள்தான் சமுதா யத்தை வழிநடத்தும் பெரும் பணியைச் செய்கின்றன என்பது வரலாற்றுண்மை. நல்ல சமுதாயம் வளர வேண்டும் என்று நினைப்போர் சிற்றிதழ்களின் வளர்ச்சியில் அக்கறை கொள்வர். நீங்கள் சமுதாய அக்கறை கொண்ட வர்கள். எனவே உங்களின் ஆதரவு என்றென்றும் உண்டு என்ற நம்பிக்கையுடன் பயணிக்கிறோம். எங்கள் பயணம் வெற்றிபெற வாழ்த்துங்கள்; உதவுங்கள்!

**- ஆசிரியர் (22.03.2024)**